Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Ethics through Palm Trees from Valluvam

**Dr M. Rajalakshmi**, Assistant Professor of Tamil,
Caussanel College of Arts and Science, Ramanathapuram, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-4418-4855
DOI: 10.5281/zenodo.6619254

## Abstract

*The Valluvam (Thirukkural) contains ideology and ethics that suits for all the generations and Era. In Valluvam, two trees are majorly described; one is the palm tree and the other one is the Bamboo tree. The benefits, its uses and comparison of palm tree are used in many places by Valluvar in VALLUVAM. Owing to its greater necessity and its usages, palm and human nature are sorted out and compared. In palm tree, all the things from its head to trunk play a vital role to human beings. Hence, the nature of human is compared and examined with the nature of palm trees. In this paper, we will see the comparison and examples sorted out describing plam tree and human nature from Valluvam.*

.

**Keywords:** Valluvam, Palm tree, Thinai, Human nature.

## References

[1] Tamilannal. *Tholkappiyam*. Chellappa Publication, Madurai, sixth edition, 2021.
[2] *Thirukkural Parimelazhar Urai*, Ganga Publication, Chennai.17, sixth edition, 2008.
[3] *Thirukkural Namakkal Urai*, Palaniappa Publication, Chennai 04, 3rd edition 1999.
[4] Devaneya Pavanar. *Thirukkural Tamil Marathurai*. Indu publication, Chennai-17. first edition, 2000.
[5] S. Dhandapani Desikar. *Thirukkural Urai Kalanjeeyam*, Madurai Kamarajar University, first edition, 1990.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# வள்ளுவத்தில் பனைமரத்தின் கருத்தாடல்

**முனைவர் மு. இராஜலெட்சுமி,** தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராமநாதபுரம், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-4418-4855**
**DOI: 10.5281/zenodo.6619254**

**ஆய்வுச் சுருக்கம்**

*முக்காலத்திற்கு பொருந்தும் வகையில் உலகியல் கருத்துக்களைப் பொதித்து வைத்து, பண்டைய மக்களின் வாழ்வியலை எடுத்துக் கூறுவது வள்ளுவம். இதில் பனை, மூங்கில என்ற இரண்டு மரங்களை பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. பனை மரம் அடிமுதல் நுனி வரை மனித வாழ்வியலுககு பயன்படுகிறது. அதன் காரணமாக பனைமரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த விரும்பி வள்ளுவர், அன்றே பனை மரத்தின் பயனை எடுத்துரைக்கின்றார். பனையின் வாயிலாக மனிதனின் மாண்பே எடுத்து கூறி மற்றவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதே கூறுகின்றார். எனவே, பனை என்ற சொல்லாட்சி மூலம் மனித குணத்தை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.*

**திறவுச்சொற்கள்**: வள்ளுவம், பனை, திணை, நடத்தை, மனித மாண்பு, குற்றம், பயன்

**முன்னுரை**

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலை உடையதாகிய எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் இயற்றப்பட்டது வள்ளுவம். இது உலகப்பொதுமறையாக எல்லோராலும் போற்றப்பட்ட சிறப்புக்குரிய ஒன்றாக காணப்படுகிறது. இப்பெருமைக்குரிய வாழ்வியல் பெட்டகத்தில் பனை மரம் பற்றி கருத்தாக்கம் இடம்பெற்றுள்ளது. எனவே பனைமரத்தின் வாயிலாக மனிதனுக்கு உரிய பண்பை மேன்மையைஎவ்வாறு வள்ளுவத்தில் கையாளப்பட்டுள்ளது என்பதை விளக்கும் முகமாக இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

**வள்ளுவமும் பனைமரத்தின் சிறப்பும்**

தமிழகத்தில் பனைமரம் தல மரமாகும். இது கற்பக விருட்சம் என்றும் தொல்மரம் என்றும் ஆதிமரம் என்றும் போற்றப்பட்டு வணங்கப்படுகிறது. இது தமிழகத்தின் அடையாளச் சின்னமாகப் போற்றப்படுகிறது. வெயில் காலத்தில் மக்களை பாதுகாக்க இயற்கை அளித்த கொடை பனை மரம். இதனை 1978ஆம் ஆண்டு தமிழக அரசால் மாநில மரமாக அறிவிக்கப்பட்டது. இது சுமார் 30அடி முதல் 40 அடி வரை வளரும் தன்மையைக் கொண்டது. இது சுமார் 60 ஆண்டுமுதல் 120 ஆண்டுகள் வரை வாழும் புல் வகையைச் சார்ந்த ஒன்றாகும். வறண்ட பூமியிலும் தலை நிமிர்ந்து நிற்கும். இதற்கு பொண்ணை, தாலம், தாளி, போந்து, போந்தை, நீலம், கருத்தாள், கரும்புறம், கருவிராகன் என்ற பெயர் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. போந்தை என்பது இளம்பருவத்தை குறிக்கும் சொல்லாடலாகும். பனைமரம் அடி முதல் நுனி வரை அனைத்தும் மனிதனுக்குப் பயன்படுகிறது. மண் அரிப்பைத் தடுத்து அடி நிலத்தை பாதுகாக்கும் கவசமாக திகழ்கின்றது. தமிழ் குடிக்கும் பனை மரத்திற்கும் நெருங்கிய

உறவு உண்டு. பனைமரம் தமிழ் மக்களின் வாழ்வியலோடும் மொழியோடும் பின்னிப்பிணைந்து இரண்டறக் கலந்தது. பண்டைய கால நூல்களான தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், நாயன்மார் பாடல்கள் போன்றவைகளில் பனைமரம் குறித்த செய்திகள் இடமபெற்றுள்ளது.. தமிழ் இலக்கிய வரலாற்றில் பனை ஓலை முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தமிழ் இலக்கியங்களை பனை ஓலைச்சுவடியிலே பாதுகாத்து வந்தனர். பனை ஓலையினை 'ஏடு' என்றும் குறிப்பிட்டனர். இப்படிப்பட்ட சிறப்புகளை உடைய பனை மரத்தினைப் பற்றி வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவத்தில் 1330 குறட்பாக்களில் இரண்டு மரங்களை மட்டுமே குறிப்பிட்டு சுட்டிக்காட்டுகின்றார். ஒன்று மூங்கில் மற்றொன்று பனைமரம் ஆகும். அடி முதல் நுனி வரை மக்களுக்குப் பயனைக் கொடுக்கும் பனைமரத்தை மூன்று இடங்களில் சுட்டி செல்கின்றார். அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற முப்பாலிலும் சுட்டி செல்வதே நன்கு அறியமுடிகிறது.அறத்துப்பால் இல்லறவியலில் செய்நன்றி அறிதல் என்னும் அதிகாரத்திலும், பொருட்பால் அரசியலில் குற்றம் கடிதல் என்னும் அதிகாரத்திலும், காமத்துப்பால் கற்பியலில் புணர்ச்சிவிதும்பல் என்னும் அதிகாரத்திலும் இடம்பெற்றுள்ளது.

பழம் பெருமை வாய்ந்த இலக்கண நூலான தொல்காப்பியத்தில், **"பனையும் அரையும் ஆயிரைக் கிளவியும்". (தொல்: எழுத்து: 283)** என்றும்,**"பனையின் முன்னர்அட்டு வரு காலை" (தொல்: எழுத்து: 284)** என்றும் குறிப்பிடுகிறது. அதுபோல பனை முன் கொடி வருவதால் புணர்ச்சியில் ஐ நின்று பனைக்கொடி எனஆயிற்று என்று உரையாசிரியர் உரை கூறுகின்றார். அதுபோல, **" தென்படு பனையின் திரள் பழத்தொரு விதை". (நறுந்தொகை: 56)** என்றும்,

**"குடி கொடுத்திக் கண்ணும் கொடுத்துண்ணொளமாக்கள்**
**இடுகாட்டுள் ஏற்றைப்பனை" (நாலடியார்: 285)**
**"உத்தமர்தாம்ஈயுமிடத்து ஓங்கு பனை" (நீதி வெண்பா: 69)** என்றும்,
**"இருபனை வில்வென்ற புருவத்தாய்! ஆற்றக்**
**கருப்பனை யன்னதுடைத்து. (பழமொழி:293)**

என்றும் இலக்கியங்களில் பனைமரம் இடம்பெறும் வரை குறிப்பிடப்படுகிறது.

**சிறு உதவி பெரும் பயன்**

எல்லா நாட்டவருக்கும் எக்காலத்திற்கும் ஏற்றவாறு இல்லற வாழ்வியலையும் செங்கோல் ஆட்சியையும் எடுத்து கூறுகிறது வள்ளுவம். வள்ளுவத்திற்குப் புகழ்மாலை சூட நினைத்த சங்கப் புலவர்கள் திருவள்ளுவ மாலை என்ற நூலை இயற்றினார். அத்தகைய பெருமை வாய்ந்த வள்ளுவத்தில் இரண்டு மரங்களை மட்டும் குறிப்பிட்டாலும், அதில் பனை மரத்தின் சிறப்பை பெருமையை எடுத்து இயம்புகிறது. பனைமரத்தின் வாயிலாக பல நல்ல அரிய கருத்துக்களை எடுத்து ஓதுகின்றது. பனைமரம் பற்றி மூன்று குறளில் மட்டுமே எடுத்து குறிப்பிடப்பட்டுள்ளது. தனக்கு பிறர் செய்த நன்றியை உணர்ந்து அதற்கு தக்கபடி நடந்து கொள்ள வேண்டும் என்கிறது. அதுபோல ஒருவர் நமக்கு செய்த உதவியை எப்பொழுதும் நினைவில் நிறுத்தி வைக்க வேண்டும் என்பதே பனைமரத்தின் வாயிலாக மனித மாண்பை அழகாக புணைந்து எடுத்து இயம்புகிறது. இதனை குறட்பா,

**"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்" (குறள்: 104)**

என்கிறது. அதாவது, ஒருவர் தமக்கு திணை அளவு சிறிய உதவி செய்தாலும் அதன் பயனை உணர்ந்த நபர்கள் பனையளவு உயர்ந்ததாக எண்ணி மதித்து போற்றுகின்றனர் என்பதை குறிப்பிடுகிறது. நாமக்கல் கவிஞர், "உபகாரத்தின் பயனை உணரக் கூடியவர்கள், ஒருவன் தமக்குத் தினையளவு மிகச்சிறிய உதவியைச் செய்தாலும் அதனை பனையளவு மிக உயர்ந்ததாகப் பாராட்டுவார்கள்" என்று கூறுகிறார். (திருக்குறள் நாமக்கல் உரை: பக்: 54) அதுபோல "தமக்கு ஒருவர் தினையளவு நன்மை செயினும் மற்று அதனைப் பனைஎளவாகப் கொண்டிருப்பேன் செய்ந்நன்றி பயனறிவார்" என்று காளிங்கர் தம் உரையை நவிழ்கின்றார. (திருக்குறள் உரைக் களஞ்சியம் - ச. தண்டபாணி தேசிகர்: பக் : 272). இருவரின் உரையைக் காணும் போது இங்கு திணை, பனை என்ற இரு சொற்களிலும் செய்யக்கூடிய செயல்களில்சிறிது பெரிது என்ற அளவை குறிக்கின்றது. அதாவது திணை சிறிய அளவிலான தானிய வகைகளில் ஒன்று. அந்த சிறிய தானிய அளவில் ஒருவர் தமக்கு உதவி செய்தால் அவவுதவியை பனை மர அளவில்உயரமாக எண்ணி மனமகிழ்வு கொண்டு பயன் அடைவார்கள் என்கிறது. மனிதனுக்கு சிறுமையையும் உயர்வையும் புகட்டும் வகையில் பனை என்ற சொல்லாடலை வள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டுச் செல்வதே அறியமுடிகிறது. இதனை தொல்காப்பியம்

**"பனையென் அளவும் காஎன் நிறையும்" (தொல்: எழுத்து:169)**

என்று குறிப்பிடுவதே நோக்கத்தக்கதாகும்.அதுபோல சிறு பயன் கொண்டு பெரும் பயனை நெடுங்காலம் தருவது பனை என்பதை நாலடியார்,

**"எண்ணரும் பெண்ணை போல்றிட்ட குன்றிட்டதே**
**தொன்மையுடையிர் தொடர்பு" (நாலடியார்: பக்: 216)**

என்று கூறுகிறது. வள்ளுவத்திற்குப் புகழ்மாலை சேர்த்த திருவள்ளுவர் மாலையில் கபிலர் அவர்கள் பனைஎளவை சுட்டுவதை,

**"திணையளவு போதாச் சிறுபுள்ளீர் நீண்ட**
**பனையளவு காட்டும் படித்தால்" (திருவள்ளுவமாலை: பா: 5)**

என்கிறது. அதாவது, திணை என்பது புல் நுனியின் பனித்துளி போன்றது. பனை என்பது பனித்துளியே தன்னுள் அடக்கும் உயரமான பெரிய வடிவே உடையது என்று எடுத்துரைக்கின்றது. ஆகவே பனைமரம் எத்தகைய சிறப்பினைப் பெற்றுள்ளது என்பதே நன்கு புலனாகிறது.

**குற்றம் சிறிது கொடுமை பெரிது**

நாட்டை ஆளும் அரசன் தனிப்பட்ட ஒருவன் இல்லை. அவன் தான் சமூகம். சமூகம் தான் அரசன். அவன் கடமையால் பொறுப்பால் கண்ணாடியைப் போன்று திகழ்பவன். அரசனிடம்உண்டாகும் குற்றம் அவனைச் சார்ந்த நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதன் காரணமாக பல துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும், அல்லகளுக்கும் ஆளாகவேண்டிய சூழல் உண்டாகிறது. அரசனிடம் ஆசை, அகம்பாவம், அவசரப்புத்தி, கருமத்தனம், கோபம் இவற்றில் எது இருப்பினும் அவற்றின் வாயிலாக பொது வாழ்வில் பல தவறுகளால் தீமையை சந்திக்கும் நிலை ஏற்படுகிறது. அதன் காரணமாக பழி பாவத்திற்கு ஆளாக வேண்டிய சூழலில் உட்படுகின்றர். எனவே பழிக்கு அஞ்சும் அரசன் தம்மிடம் எண்ணத்தளவில் குற்றம் இல்லாமல் தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகிறது. சிறு குற்றம் செய்தால் கூட அதனை மிகப்பெரிய குற்றமாக எண்ணி மனகுழப்பம் அடையும் நிலையே பெறுகின்றனர். ஒருவர் சிறு குற்றம் செய்தால் அதனை பனைமரம் உயரத்திற்குப் பெரிதாக எண்ணி மனவேதனை அடைந்து நிலையே குறட்பா, "திணைத்துணையாம்

குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் பழிநாணு வார்". (குறள்: 433) என்று குறிப்பிடுகிறது அதாவது பழிச்சொல்லுக்கு நாணம் கொள்ளும் அரசசன், சான்றோர்,ஆன்றோர், மக்கள்அனைவரும் தினையளவு தம்மிடம் சிறு குற்றம் கண்டாலும் அதனை பனைமரத்தின் அளவாக கருதி, குற்றம் புரியாமல் தம்மைக் காத்துக் கொள்வார்கள். இதனை" பழிக்குப் பயப்படுக்கின்றவர்கள் தம்மீது தினையளவு குற்றம் வந்தாலும் அதனைப்பனையளவாக எண்ணி வருந்துவார்கள்" என்று நாமக்கல் கவிஞர் உரை நவிழ்கின்றார் (திருக்குறள் நாமக்கல் கவிஞர் உரை: பக்:218). அதாவது, பழி பாவத்திற்கு அச்சம் கொள்கின்றவர் சிறிய குற்றம் செய்தாலும் அதனை பனைமர அளவிற்குப் பெரிதாக எண்ணி வருத்தம் அடைவார்கள் என்பதே உரையாசிரியர் பதிவு செய்கின்றார். "குணப்பயன் அறியும் குணமுடையோர் தினையளவு சிறிய குற்றம் ஒருகால் வருவதாயினும் அதனைப் பனையளவான குற்றம் ஆகக்கொள்வர். குற்றத்துக்கு நாணும் அறிவுடையோர்" என காளிங்கர் உரை புனைந்துரைக்கின்றார். இங்கு அறிவுடையோர் என்று குறிப்பிடுவது அரசன், சான்றோர், மக்கள் ஆகியோரை குறிக்கும் எனலாம். இப்பெரியோர் குற்றம் செய்யமாட்டார்கள் அப்படியே தன்னை அறியாமல் சிறிய குற்றம் செய்து விட்டால் அக்குற்றத்தை எண்ணி வருந்தி பனைமரத்தின் அளவு பெரிதாக குற்றம் செய்துவிட்டதாக கருதி வெட்கம் கொள்வார்கள் என்பதே வள்ளுவர் குறட்பாக்களில் வடித்து காட்டியுள்ளார்.

**ஊடல் சிறிது காமம் பெரியது**

தலைவன் தலைவிக்கு களவில் தோன்றிய காதல் திருமணத்திற்கு பிறகு கற்பில் முடிகின்றது. திருமணம் முடிந்த தலைவன் தலைவி இருவரும் ஒத்த வயதை உடைய நிலையில் இருப்பினும் அவர்களுக்கிடையே சில ஊடல்கள் ஏற்படுகின்றன. தலைவிக்கு ஏற்படும் ஊடல் என்பது கருத்து வேறுபாடு அல்லதுசிறு சண்டை அல்லது பொய்யான கோபம் என்ற பொருள்களில் ஆளப்படுகிறது. கற்பு வாழ்க்கையில் தலைவன் பரத்தைநடிச்செல்லும் போது அவன் ஒழுக்கத்தைக் கண்டிக்கும் விதமாக தலைவி ஊடல் கொள்ளும் நிலையைஇலக்கியங்கள் குறிப்பிடுகிறது. அதுபோல திருமணத்திற்குப் பின்பு கூடி வாழும் போது மனைவி தன் ஆசையை அல்லது ஆவலைத் தனிக்காத போது கணவன் ஊடல் கொள்ளும் நிலையை இலக்கியங்கள் சுட்டுகிறது. எனவே தலைவன் தலைவி இவ்விருவரும் ஊடல் கொள்ளும் முறையை குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் ஆண் ஊடல் கொண்டு இருப்பதை,

**"உணர்ப்பு வரை இறப்பினும் செல்குறி பிழைப்பினும்**
**புலத்தலும் ஊடலும் கிழவேற்கு உரிய" (தொல்காப்பியம்: 1102)**

என்று கூறுகிறது. ஆனால் வள்ளுவர் யாத்த தலைவி, தலைவன் மீது அளவற்ற அன்பு உடையவளாக காட்டுகிறார். தலைவன் மீது சிறிது பொய் ஊடல் இருந்தாலும் அதனை மறைத்து கோபம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதைக்கூறுகின்றார். வள்ளுவர் காட்டிய தலைவி தலைவனைப் பிரிந்த வெகுநாட்கள் ஆன நிலையில் சிறு ஊடல் இருந்தாலும்அதனை பனைமர அளவில்வரும் காம அன்பைநினைவில் நிறுத்தி கோபத்தை வேண்டாம் என்று கூறுவதே குறட்பாக்களின் வழியே காணலாம்.

**"தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத் துணையும்**
**காமம் நிறைய வரின்" (குறள்: 1282)**

என்கிறது. அதாவது நீண்ட நாள் காமம் என்ற அன்புடன் காத்துஇருப்பதால் பனைமரத்தின் அளவோடு ஒப்பிட்டு கூறுகிறது. அதாவது தினை அளவு சிறிது கூட ஊடல் கொள்ள கூடாது என்பதை

வலியுறுத்துகிறது. இதற்கு உரை நல்கிய எந்த உரையாசிரியர் "மகளிர்க்குக் காமம் பனையளவினும் மிக உண்டாமாயின் அவரால் தம் காதலரோடு தினையளவும் ஊடுதல் செய்யாமை வேண்டப்படும்" என்று குறிப்பிடுகிறார். (திருக்குறள் பரிமேலழகர் உரை: பக்:545) அதுபோல மற்றொரு உரை "மகளிருக்குக் காமம் பனையளவாகவும் நிரம்ப வுண்டாகுமாயின் அவர் தம் காதலரொடு தினையளவும் ஊடுதலை மேற்கொள்ளதிருத்தல் வேண்டும்" என்று தேவநேய பாவாணரும் குறிப்பிடுகின்றார். எனவே இங்கு காமம் பனைமரம் அளவு என்றும், கூடல் தினை அளவு கூட இருத்தல் கூடாது. அது பனை அளவு இருக்கும் காம இன்பத்தை அழித்துவிடும் என்பதைக் குறிப்பிடுகிறது. இதனை கம்பராமாயணப் பாடல் ஒன்று, **"காமநறை யின்றிற்நுகர்ந்தவர் களித்தார்" (கம்பராமாயணம்: பக்: 5101)** என்பதை சுட்டுகிறது.

**முடிவுரை**

வள்ளுவ பெருந்தகை பனை என்ற சொல்லின் வழியாக அதன் ஆழத்தையும் முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றார். பனைமரம் மிக உயர்ந்த மரம் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. வள்ளுவர் அதனை மக்களின் மாண்போடும் பண்போடும் அன்போடும் ஒப்பிட்டு கூறுகின்றார். ஒருவர் செய்த நன்றியை நினைக்கும் தருவாயில் பனைமரத்தை உயர்வாக கூறிச் செல்கிறார். அதுபோல குற்றம் செய்யாதா அரசரோ, சான்றோரோ, மக்களோ யாரேனும் ஒருவர் சிறிது குற்றம் செய்தால் அதனை பனைமரத்தின் அளவாக பெரிதாக எண்ணி வெட்கம் கொண்டு தலைகுனியும் நிலையைக் குறட்பாக்களில் அழகாக புனைந்துஉரைத்துள்ளார். தலைவன் அன்பை வெளிப்படுத்தும் போது தலைவி சிறிது கூட ஊடல் கொள்ளக்கூடாது என்பதை அழகான வரிகளில் வடித்து காட்டியுள்ளார். எனவே வள்ளுவப் பெருந்தகை பனைமரத்தின் வாயிலாக மக்களின் மகத்தான மாண்பைநேயத்தை விதைத்து இருப்பதை நன்கு உணர முடிகிறது.

**பார்வை நூல்கள்**

[1] தொல்காப்பியம்- தமிழண்ணல் - செல்லப்பா பதிப்பகம், மதுரை. ஆறாம் பதிப்பு - 2021.
[2] திருக்குறள் பரிமேலழகர் உரை - கங்கை புத்தக நிலையம், சென்னை-17 ஆறாம் பதிப்பு –2008.
[3] திருக்குறள் நாமக்கல் உரை - பழனியப்பா பிரதர்ஸ்' சென்னை-04 மூன்றாம் பதிப்பு – 1989.
[4] திருக்குறள் தமிழ் மரபுரை - ஞா. தேவ நேய பாவாணர் - ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை 17 முதல் பதிப்பு - 2000.
[5] திருக்குறள் உரை களஞ்சியம் - சா. தண்டபாணி தேசிகர் - மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை -21 முதற் பதிப்பு, 1990.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.